# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.
## C.C. No.50/2024 PW.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சத்தியரேணுகா | க–பெ | சதிஷ்குமார் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 37/24 | வட்டம்: | |
| தொழில்: | : | Senior Manager I.O.B.<br>Karaikudi Main Branch | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.12.2024**

-----------------------------------------------------------------------------------------------------

24.12.2024

முதல் விசாரணை :

நான் காரைக்குடி இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் முதுநிலை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. எனக்கு வந்த நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள சேமிப்பு கணக்கு எண்.003401000038672 யார் பெயரில் உள்ளது என்றால் ஆர்.பாலகிருஷ்ணன் என்பவர் பெயரில் உள்ளது. அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள காசோலைகள் தொடர்பான ஆவணங்களை நான் கொண்டு வந்துள்ளேன். இதில் குறிப்பிட்டுள்ள 02.09.2015 தேதியிட்ட காசோலை எண்.138812 ஜே.பீரித்திலோசினி என்பவர் பெயரில் ரூ.96 ஆயிரத்திற்கு பணமாகியுள்ளது. 13.10.2020 ம் தேதியிட்ட காசோலை எண்.138858 ஜே.பீரித்திலோசினி என்பவர் பெயரில் ரூ.1 லட்சத்திற்கு பணமாகியுள்ளது. 20.11.2020 ம் தேதியிட்ட காசோலை எண்.138882 ஜே.பீரித்திலோசினி என்பவர் பெயரில் ரூ.1 லட்சத்திற்கு பணமாகியுள்ளது. மேற்படி பரிவர்த்தனைகளுக்கான **வங்கி கணக்கு பட்டியல் ம.சா.ஆ.5 ஆகும்.**

**குறுக்கு விசாரணை**

புகார்தாரர் பாலகிருஷ்ணன் என்பவர் பெயரில் எங்கள் வங்கியில் வேறு கடன்கள் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. 2015 முதல் 2024 ஆண்டு வரையிலான புகார்தாரரின் வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். அழைப்பாணையில் கேட்கப்பட்டுள்ளதை மட்டும் தாக்கல் செய்திருக்கிறேன். நான்

**தாக்கல் செய்துள்ள கணக்கு பட்டியலில் பணம் திருப்பி செலுத்தப்பட்ட விவரம் எதுவும் இல்லையென்றால் பணம் திருப்பி செலுத்தப்பட்டதா என்று தெரியாது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's)**
விரைவுநீதிபதி, காரைக்குடி.